**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.**

அரசு தரப்பு சாட்சி 7(LW9) வாக்குமூலம்

**சிறப்பு வழக்கு எண்.7/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | வெற்றிகொண்டான் | வட்டம் | - | |
| த/பெ | - | சீத்தாரமன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 10.06.2024, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் தற்போது கிராம நிர்வாக அலுவலராக செஞ்சி வட்டம் பெருங்காபூரில் பணிசெய்துவருகிறேன். கடந்த 19.11.2020 அன்று செஞ்சி வட்டம் துத்திபட்டு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். 19.11.2020ல் மதியம் 3.00 மணியளவில் துத்திபட்டு கிராமத்தில் தாமோதரன் என்பவர் நிலத்திற்கு பக்கத்தில் கெங்கவரம் ரோடு உள்ளது. அங்கு நானும் எனது கிராம நிர்வாக உதவியாளர் அருணாச்சலமும் சென்றோம். அப்போது கஞ்சனூர் காவல் ஆய்வாளர் அங்கு வந்து குப்பன் என்பவர் மின்சார வேலியில் மாட்டி உயிரிழந்தது சம்பவமாக எதிரியை பிடித்துவைத்துள்ளதாகவும் என் முன்னிலையில் வாக்குமூலம் வாங்கவேண்டும் என்று சொன்னார்கள். நாங்கள் தாமோதரன் நிலத்திற்கு அருகில் சென்றோம். அப்போது எதிரி நெற்பயிரை காட்டுபன்றியிடம் இருந்து காப்பாற்றுவதற்காக அவரது நிலத்தில் மின்சாரம் வைத்ததாகவும் அங்கு வைத்த வேலியில் 26.10.2020 அன்று இரவு 7.00 மணிக்கு குப்பன் என்பவர் அந்த வேலியில் மாட்டி இறந்துவிட்டதாகவும் மின்வேலி அமைப்பதற்கு பயன்படுத்திய

கம்பி மற்றும் ஒயர் ஆகியவற்றை அவருடைய நிலத்தின் புதரில் மறைத்து வைத்திருந்ததாகவும் அதை எடுத்து கொடுப்பதாக சொன்னார். ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது கிராம உதவியாளரும் கையெழுத்து போட்டோம். எதிரியும் கையெழுத்து போட்டார். அதில் உள்ள முதலாவது என்னுடையது. இரண்டாவது கையெழுத்து என்னுடைய உதவியாளருடையது. அது அதசாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முட்புதரிலிருந்து பீஸ் கேரியர் ஒன்று, மின்சார ஒயர், இரும்பு கட்டு கம்பி ஆகியவற்றை எடுத்துக்கொடுத்தார். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் வெள்ளை நிற ஒயருடன் கூடிய பீஸ் கரியல் சாபொ.5 ஆகவும் இரும்பு கட்டு கம்பி சாபொ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். அந்த மகசரில் நானும் எனது உதவியாயரும் கையொப்பம் செய்தோம். அதிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. இரண்டாவது கையெழுத்து என்னுடைய உதவியாளருடையது. அது அதசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை, எதிரியின் இளம்வழக்கறிஞர் ஆஜர் குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது. மாலை 5.00 மணி வரை வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எனவே குறுக்குவிசாரணை இல்லை.